

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மாங்குடி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில்தமிழ்நாடு முதலமைச்சர் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் என்ற திட்டம்: முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்

### கலெக்டர் ப.ஆகாஷ் விதைத் தொகுப்புகளை வழங்கினார்



**நாகப்பட்டினம்,ஜூலை.05-** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்ற பேரவையில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்ற திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக துவங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, நாகப்பட்டினம் மாவட்டத்தில் கலெக்டர் அவர்களால் இத்திட்டம் துவங்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஆறு வட்டாரங்களில், நாகப்பட்டினம் வட்டாரம் சிராங்குடி புலியூர் கிராமத்திலும், கீழையூர் வட்டாரம் விழுந்தமாவடி கிராமத்திலும், கீழ்வேளூர் வட்டாரம் வேளாண் விரிவாக்க மையத்திலும், திருமருகல் வட்டாரம் வேளாண் விரிவாக்க மையத்திலும், வேதாரண்யம் வட்டாரம் கத்திரிப்புலம் கிராமத்திலும் மற்றும் தலைஞாயிறு வட்டாரம் திருமாளம்; கிராமம் உழவர் கலந்தாய்வு கூட்ட அரங்கிலும் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களால் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்;படுகிறது.

மக்கள் நலமும் நல்வாழ்வும் உண்ணும் உணவைப் பொறுத்தே அமைகிறது. ஊட்டச்சத்துக்களை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள் மற்றும் சிறுதானியங்கள் ஆகியவை பெரும் பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விலை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன் உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்"; என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலமாக காய்கறி விதை தொகுப்பு முழுத்தொகை மதிப்பு ரூ.60ஃ- (கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய்,கொத்தவரை மற்றும் கீரை போன்ற 6 வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு) 100மூ மானியத்திலும், பழச்செடி தொகுப்பு முழுத்தொகை மதிப்பு ரூ.100ஃ- (பப்பாளி, கொய்யா, எலுமிச்சை 3 செடிகள் அடங்கிய தொகுப்பு) 100மூ மானியத்திலும் வழங்கப்படுகிறது. வேளாண்மைத்;துறை மூலமாக பயிறு வகை விதை (காரமானி, துவரை, அவரை விதைகள்) ரூ.67ஃ-மதிப்பில் 100மூ மானியத்தில் வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் பயன்பெற விவசாய பெருமக்கள் உழவன் செயலி மூலம் முழுமையான விவரங்களுடன் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒரு தொகுப்பு விதம் வழங்கப்படும்.

மேலும், நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலக முதன்மை கூட்டரங்கம் மற்றும் மாவட்டத்திலுள்ள ஆறு வட்டாரங்களிலும் சுமார் 150 விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை சார்பில் மரத்துவரை, காராமணி மற்றும் அவரை அடங்கிய பயறு வகைகள் விதைத் தொகுப்புகளும், தோட்டக்கலைத்துறை சார்பில் 150 விவசாயிகளுக்கு தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, கீரை வகைகள் மற்றும் கொத்தவரை ஆகியவை உள்ளடக்கிய காய்கறி விதைத் தொகுப்புகளும் மற்றும் 150 விவசாயிகளுக்கு பப்பாளி, கொய்யா மற்றும் எலுமிச்சை அடங்கிய பழச்செடி தொகுப்புகளும் வழங்கப்பட்டுள்ளது என கலெக்டர் ப.ஆகாஷ், தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.பவணந்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மண்டல மேலாளர் அ.சிவப்பிரியா, நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் கோ.அரங்கநாதன், செயற்பொறியாளர் (வெண்ணார் வடிநில கோட்டம்) இராஜேந்திரன், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சே.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) வை.தயாளன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்(பொ) முத்துக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள், மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **DEEPIKA .S, D/o. N. Senthil, Aged 22 Years, Permanently Residing at : Paravathur Main Road, Kannugudi East (PO), Kannugudi Village, Orathanadu (TK), Thanjavur District, Tamilnadu - 614 901.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

DEEPIKA .S

**சீர்காழி நகராட்சி, மயிலாடுதுறை மாவட்டம்**

ந.க.எண்.607/2025/இ1 நாள்: 30.06.2025

**15 th CFC (Tied Grant ) 2025-2026**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி மற்றும் முகவரி | ஆணையர், சீர்காழி நகராட்சி. |
| 2 | பணியின் விபரம் | வ. எண் / பணியின் பெயர்/ விபரம் / தொகை (ரூ இலட்சத்தில்) — 15 th CFC (Tied Grant ) நிதி திட்டம் 2025–2026 — 1 / சீர்காழி நகராட்சியில் கணபதி நகர் விரிவாக்கம் (099022R173) NGO நகர் பாகம் 2 (099022R183) VB சங்கர் நகர் (099022R177) ஆகிய பகுதிகளில் மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணி. / 53.00 |
| 3 | எந்த இடத்தில் எந்த தேதி வரை ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான படிவம் கிடைக்கும் என்ற விபரம் | வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தை http://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 07.07.2025 முதல் 23.07.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம். |
| 4 | செலுத்தப்பட வேண்டிய முன் வைப்புத் தொகை விபரம் | வ.எண் 1 — தொகை ரூ.53,000/- |
| 5 | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும் | நகராட்சி அலுவலகம், சீர்காழி 23.07.2025–ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை |
| 6 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும் நாளும் நேரமும் | நகராட்சி அலுவலகம், சீர்காழி 23.07.2025–ம் தேதி பிற்பகல் 3.30 மணி வரை ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறை அறிவிக்கும்பட்சத்தில் மறு வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்யப்படும். |
| 7 | ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற சமர்ப்பிக்க வேண்டிய சான்றுகள் விபரம் | ஒப்பந்ததாரர்கள் வலைதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அசல் வங்கி வரைவோலை மற்றும் அசல்/ சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் 23.07.2025 புதன் கிழமை அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும். |

ஆணையர்
சீர்காழி நகராட்சி.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.31/செ.ம.தொ.அ/2025/மயிலாடுதுறை/ நாள்: 04.07.2025

## திருமருகலில் ஓரணியில் தமிழ்நாடு பிரச்சாரம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்



**நாகப்பட்டினம்,ஜூலை.05-** தமிழகத்தை வஞ்சிக்கும் பாஜகவின் செயல்பாடுகளை விளக்கி திருமருகலில் ஓரணியில் தமிழ்நாடு பிரச்சாரம் நடைபெற்றது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஓரணியில் தமிழ்நாடு எனும் பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் தமிழக மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ செங்குட்டுவன் ஆகியோர் முன்னிலையில் திருமருகல் தெற்கு வீதியில் வெள்ளிக்கிழமை பிரச்சாரம் நடைபெற்றது. பிரச்சாரத்தில் தமிழகத்தின் உரிமைகள் மொழி பண்பாடு மற்றும் நிதி நலன்களை புறக்கணிக்கும் பாஜக அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து திருமருகல் ஊராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகள் தோறும் சென்று பொது மக்களை நேரில் சந்தித்து திமுகவினர் பிரச்சாரம் செய்தனர்.

இதில் தொகுதி பொறுப்பாளர் பால அருட்செல்வன் மாவட்ட துணை செயலாளர் மனோகரன் மாவட்ட பிரதிநிதி குமார் அயலக அணியின் துணை தலைவர் விஜயகணபதி மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் துணை அமைப்பாளர் செந்தில்நாதன் ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் அமைப்பாளர் பால்ராஜ் கிளைச் செயலாளர் ஆறுமுகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதைதொடர்ந்து திருமருகல் தெற்கு ஒன்றியம் நெய்குப்பை ஊராட்சியில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு நிகழ்ச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இதில் திருமருகல் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் மாவட்ட துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் இளஞ்செழியன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக் மாவட்ட நெசவாளர் அணியின் அமைப்பாளர் இளம் சுந்தர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருண்குமார் மாவட்ட பிரதிநிதி ரமேஷ் கண்ணா ஒன்றிய துணை செயலாளர் துரையரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருவாரூரில் கிறிஸ்துவ பாதிரியார்கள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை



**திருவாரூர்,ஜூலை.05-** திருவாரூர் மாவட்டம்,குடவாசல் தாலுகா, அத்திக்கடை பகுதியில் ஒரு வீட்டை மத போதகர் ஜோசப் வில்சன் என்பவர் கடந்த 2023-ம் ஆண்டு விலைக்கு வாங்கினார்.பின்னர் அந்த வீட்டில் எழும்பி பிரகாச ஜெப வீடு என்ற பெயரில் பிரார்த்தனை கூட்டம் நடத்தினார்.இதற்கு அந்த பகுதியில் உள்ள பொது மக்கள் மற்றும் இந்து அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.தொடர்ந்து திருவாரூர் மாவட்ட கலெக்டர் உத்தரவிட்ட தன் அடிப்படையில் குடவாசல் வட்டாட்சியர் பிரார்த்தனைக் கூடத்தை மூடி சீல் வைத்தார்.இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மதபோதகர் ஜோசப் வில்சன் வழக்கு தொடர்ந்தார்.அதனை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம் எந்த ஒரு அனுமதியையும் பெறாமல் பிரார்த்தனை கூட்டம் நடத்த எந்த உரிமையும் இல்லை எனவும் வீட்டை பிரார்த்தனை அரங்கமாக மாற்ற அதிகாரம் இல்லை எனவும் மீறி பிரார்த்தனை அரங்கமாக பயன்படுத்த முயற்சித்தால் சட்டப்படி தகுந்த நடவடிக்கையை மாவட்ட கலெக்டர் எடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் கிறிஸ்தவ மக்கள் வீடுகளில் பிரார்த்தனை செய்யவும் தடை உத்தரவு பிறப்பித்த சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பணை குறித்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய கூடும் என எழும்பி பிரகாசி மிஷனரி பேராயத்தின் நிறுவனர் கேசிங் அறிக்கை விட்டுள்ளார்.இதுகுறித்து எழும்பி பிரகாசி மிஷனரி அமைப்பு சார்ந்த பாதிரியார்கள் தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர்.50 மாதங்களாக ஆட்சி புரிந்து வரும் தமிழக முதல்வரும்,திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தான் அளித்த தேர்தல் வாக்குறுதி பக்கம் 120ல் உள்ள எண் 492வது வாக்குறுதியான மத வேறுபாடு இன்றி அனைத்து மத நிறுவனங்களுக்கும் அவரவருக்கு சொந்தமான இடங்களில் வழிபாட்டு தலங்களை அமைத்து கொள்ள அனுமதி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றாமல் உள்ளார்.தேர்தல் வருவதற்கு பத்து மாதங்களே உள்ள நிலையில் திமுக அரசு இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.97 சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம் என கூறும் அரசு மீதமுள்ள மூன்று சதவிகித வாக்குறுதியில் எங்களது வாக்குறுதி உள்ளது என்பதை நினைவுகூர்ந்து அதனை உடனடியாக நிறைவேற்றி தர வேண்டும் என்று திருவாரூரில் கிறிஸ்துவ பாதிரியார்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

## ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் எனும் புதிய திட்டத்தினை முதலமைச்சர் தொடங்கி வைத்த நிகழ்வு நேரலையில் ஒளிப்பரப்பு

### கலெக்டர் வே.சரவணன் மக்களுடன் பார்வையிட்டார்



**திருச்சி,ஜூலை.05-** தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (04.07.2025) சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்த நிகழ்வு நேரலையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்;டம், ஆங்கரையில் நடைபெற்ற விழா நிகழ்வில் ஒளிப்பரப்பட்டதை தொடர்ந்து,

கலெக்டர் வே.சரவணன் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கலெக்டர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் எனும் புதிய திட்டம் தொடங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் நலமும், நல்வாழ்வும் உண்ணும் உணவைப் பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். ஊட்டச்சத்துக்களை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள் பெறும் பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யவும், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் உன்னத்தை நோக்கத்தின் அடிப்படையில் இத்திட்டம்; தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயறு வகைகள் விதை தொகுப்பு, காய்கறிகள் விதைத் தொகுப்பு மற்றும் பழச்செடிகள் தொகுப்புகள் உள்ளிட்டவைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், உழவர் செயலியில் பதிவேற்றம் செய்தவர்கள் hவவி:ஃஃவnhழசவiஉரடவரசந.வn.பழஎ.in என்னும் வலைதளத்தில் விண்ணப்பித்தவர்கள், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட இருக்கிறது. பயனடைய விரும்பும் பயனாளிகள் தங்களது ஆதார் அல்லது குடும்ப அட்டை நகலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்;பித்து தொகுப்புகளை பெற்றுக் கொள்ளலாம். மேலும், இத்திட்டத்தின்கீழ் ஒரு பயனாளி ஏதாவது ஒரு தொகுப்பை மட்டுமே பெற இயலும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் hவவி:ஃஃவnhழசவiஉரடவரசந.வn.பழஎ.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்;வில், இலால்குடி சட்டமன்ற உறுப்பினர் சௌந்திரபாண்டியன், இலால்குடி வருவாய் கோட்டாட்சியர் சிவசுப்பிரமணியன், வேளாண்மை துறை இணை இயக்குநர் பூ.வசந்தா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயராணி, துணை இயக்குநர் (தோட்டக்கலை துறை) சரண்யா, அரசு அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாய பெருங்குடி மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

**கூடுதல் சார்பு நீதிமன்றம்,
குளித்தலை.
M.C.O.P.No.2/2024**

பிரகாஷ்குமார்.
– மனுதாரர்
– எதிர் –
பூமிநாதன்,
த/பெ.கலியவரதன்,
45, ஆல்பேட்டை,
மஞ்சகுப்பம்,
கடலூர் மாவட்டம்.
– 2–ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் தாங்கள் கோர்ட்டில் ஆஜராவதற்கு பலமுறை கோர்ட் மூலமாகவும் தபால் மூலமாகவும் அறிவிப்பு அனுப்பியும் ஆஜராகததால் தாங்கள் சமூகம் கோர்ட்டில் ஆஜராவதற்கு ஏதுவாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவாகியுள்ளது. வழக்கு வாய்தா 15.07.2025 அன்று போடப்பட்டுள்ளது. வாய்தா அன்று தாங்கள் நேரடியாகவோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் வழக்கு தங்களை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

R.முரளி, M.Sc.,B.L.,.
வழக்கறிஞர், மயிலாடுதுறை.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## திருவாரூர் மாவட்டம்

## உழவர் நலத்துறையின் சார்பில் உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் என்ற புதிய திட்டம்

### முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்



**திருவாரூர்,ஜூலை.05-** தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதுடன் உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்ற புதிய திட்டத்தினை தொடங்கி வைத்ததனை தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி வட்டாரம், கரையாபாலையூர் ஊராட்சி, பூங்காவூர் கிராமத்தில், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் திட்டத்தின் கீழ் திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் அவர்களும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அவர்களும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இன்றைய தினம் ( 04.07.2025 ) திருவாரூர் மாவட்டத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு 5 வகையான பயறு வகை தொகுப்புகளும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 25 பயனாளிகளுக்கு 6 வகையான காய்கறி விதைகளும், 5 விதமான பழச்செடிகள் தொகுப்புகளும் திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், அவர்களாலும், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் அவர்களாலும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அவர்களாலும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கொரடாச்சேரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் விதைப்பைகளை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அவர்களும் மாணவிகளுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்வில், வேளாண்மை இணை இயக்குனர் பாலசரஸ்வதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஹேமா ஹெப்சிபா நிர்மலா, வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) விஜயலட்சுமி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் நீதிமாணிக்கம், கொரடாச்சேரி வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் செல்வி.ஜனனி, வேளாண்மை அலுவலர் மனோஜ்குமார், வேளாண்மை துணை அலுவலர் ரவி, குடவாசல் வட்டாட்சியர் ஸ்டாலின், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கொண்டனர்.

**நாமகிரிப்பேட்டை (தேர்வு நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்**

ந.க.எண்: 158/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள்: 03.07.2025

**15வது நிதி ஆணைய மான்ய திட்டம் - 2025-2026**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சம் | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | நாமகிரிப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட அரசினர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திற்குள் வட்டார பொது சுகாதார அலகு அமைத்தல். | 65.00 | 65,000 | Class - I | 20 மாதங்கள் |

நாமகிரிப்பேட்டை பேரூராட்சியில் 2025-26ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய நிதி திட்டத்தில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) இணையதளம் வாயிலாக மட்டுமே ஒப்பந்தப்பபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 23.07.2025-ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இணையதளம் வாயிலாக மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23.07.2025-ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை நாமகிரிப்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. **https://tntenders.gov.in** என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(ஒம்) ஆறுமுகம்
செயல் அலுவலர்,
நாமகிரிப்பேட்டை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்

செ.ம.தொ.இ/3444/ஒப்பந்தப்புள்ளி/2025

**கீழ்பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்**

**ந.க.எண்.117/2024** **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** **நாள்: 23.06.2025**

கீழ்பென்னாத்தூர் முதல்நிலைய பேரூராட்சிக்கு **2025–2026ம் ஆண்டிற்கு அயோத்திதாச பண்டிதர் மேம்பாட்டு திட்டத்தின்** கீழ், அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட பணிக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **09.07.2025ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை** இணையதளத்தில் பதிவேற்றம் செய்துக்கொள்ளலாம். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **09.07.2025ம் தேதி மாலை 3.30 மணிக்கு** வருகைபுரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் **09.07.2025ஆம் தேதி மாலை 3.00 மணி வரை** கீழ்கண்ட வலைதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **(https://tntenders.gov.in, https://tenders.tn.gov.in)**

| | | |
|---|---|---|
| **பணியின் பெயர்:** கீழ்பென்னாத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட கருங்காலிகுப்பம் பகுதியில் சமுதாய கூடம் கட்டுதல். | | |
| மதிப்பு ரூபாய் (லட்சத்தில்): **100.00** | டேவணித் தொகை ரூ: **1,00,000/-** | பணி முடிக்க வேண்டிய காலம்: **1 வருடம்** |

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்த தேதியினை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

**கோ.சரவணன்,** தலைவர்,
கீழ்பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்

**வெ.இராதாகிருஷ்ணன்,** செயல் அலுவலர்,
கீழ்பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்

செ.ம.தொ.இ / **3448** / ஒப்பந்தப்புள்ளி / 2025

